# மூன்று ஞானஸ்நானங்கள்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 2

## பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்த இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# முகவுரை

மறுபடியும் பிறந்த அனுபவம், தண்ணீர் ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் என்பவைகளின் அர்த்தம் என்ன என்ற அஸ்திபார சத்தியங்கள், எல்லா கிறிஸ்தவர்களுக்கும் அத்தியாவசியமானவைகள். இவைகள் தான் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை நம்பிக்கைகளாகும். அவைகளை விளங்கிக்கொள்ள தவறுவதென்பது, ஒரு மனிதன் மணலின் மேல் தன் வீட்டைக் கட்டுவது போன்றதாகும்.

அநேக கிறிஸ்தவர்கள் இந்த அடிப்படை நம்பிக்கைகளை விசுவாசிக்கின்றனர். ஆனால் தங்கள் விசுவாசத்திற்கு உறுதுணையாயிருக்கும் வேதபுத்தகத்திலிருந்து, அவைகள் உண்மையானவைகள் தான் என்று உறுதிப்படுத்திக்கொள்ள அவர்களால் முடிவதில்லை. அந்நிய பாஷையில் பேசும் ஒரு கிறிஸ்தவரை சந்திப்பதென்பது ஒரு பொதுவான அனுபவமே. ஆனால் அந்நிய பாஷை ஏன் அவசியமானதென்று வேதத்திலிருந்து அவரால் காண்பிக்க முடிவதில்லை. இப்படிப்பட்ட போதனையின் தேவையை சந்திக்கவும், விசுவாசிகள் இவைகளில் வேர் கொண்டவர்களாக இருக்கவும் வேண்டுமென்பதே இப்புத்தகத்தின் நோக்கமாகும்.

அவைகள் கிறிஸ்தவ வாழ்விற்கு ‘வெறும் அவசியமானவைகளாகும்’. ஆனால் கிறிஸ்தவர் களுக்கு முழு தேவ ஆலோசனையையும் போதிக்க வேண்டிய மிகப்பெரிய தேவை ஒன்று இருக்கிறது (அப். 20:26).

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## அத்தியாயம் 1

# வேதத்திலுள்ள ஏழு ஞானஸ்நானங்கள்

வேதத்தில் ஏழு ஞானஸ்நானங்கள் உள்ளன, அவைகளில் நான்கு ஞானஸ்நானங்கள் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு பொருந்துவதாக உள்ளன. அந்த நான்கில் மூன்று ஞானஸ்நானங்கள் பொதுவாக எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்துவதாக உள்ளன. ஒன்று மட்டும் குறிப்பாக ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு பொருந்தும்.

வேதத்தில் எழுதப்பட்டுள்ள ஏழு ஞானஸ்நானங்கள் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன:

1. தேவனுடைய நாமத்தில் கொடுக்கப்பட்ட யோவானின் தண்ணீர் ஞானஸ்நானம் (மத். 3; லூக். 3; அப். 1:4 யோவா. 1:31, 33).
2. பிதாவின் நாமத்தில் கிறிஸ்துவின் சீஷர்களால் கொடுக்கப்பட்ட தண்ணீர் ஞானஸ்நானம் (யோவா. 3; 22, 23; 4:1 -3; 5:43; 10:25).
3. மேகத்திலும் சமுத்திரத்திலும் மோசேயின் ஞானஸ்நானம் (1 கொரி. 10:2).
4. பாடுகளின் ஞானஸ்நானம் (லூக். 12:15 ; மத். 20:22, 23).
5. கிறிஸ்துவுக்கு உள்ளான மற்றும் சபையாகிய அவருடைய சரீரத்திற்கு உள்ளான ஞானஸ்நானம் (ரோம. 6:4; 12:4, 5; 1 கொரி. 10:17; 12:13; கலா. 3:27; எபே. 4:5; கொலோ. 2:12) .
6. கிறிஸ்தவ தண்ணீர் ஞானஸ்நானம் (மத். 28:19; அப். 2:38).
7. பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் (அப். 1:5, 8, 2:4).

### *பாடுகளின் ஞானஸ்நானம்*

இயேசு தன் சீஷர்களாகிய யாக்கோபு மற்றும் யோவானிடத்தில் பேசின பொழுது, 'நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா ?' என்று அவர்களை கேட்டார் (மத். 20:22, 23). இங்கு பாடுகளின் ஞானஸ்நானத்தையே இயேசு திட்டவட்டமாக குறிப்பிடுகிறார். அவர்களால் கூடும் என்று இயேசு சீஷர்களுக்கு பதிலளிக்கையில், பாடுகளின் ஸ்நானத்தால் அவர்கள் மெய்யாகவே ஞானஸ்நானம் பெறுவார்கள் என்று இயேசுவும் ஒத்துக்கொண்டார்.

கிறிஸ்தவ ஊழியத்திற்கான அழைப்பு என்பது, இயேசுவுக்காக பாடுபடுவதற்காகவும் அழைக்கப் படுவதாகும். எனினும் சிலர் தங்களது சொந்த பாவத்திற்கும் தவறுகளுக்கும் பாடுபடும் பொழுது, அதை தேவனுக்காக பாடுபடுவதாக கருதுகின்றனர். ஆனால் உண்மையான அங்கீகரிக்கப்பட்ட கிறிஸ்தவ பாடுகள் என்பது, இயேசுவைப்போல இருப்பதால் வரும் பாடுகளாகும். கிறிஸ்தவபாடுகள் என்பது அநீதிக்காக பாடுபடாமல், நீதிக்காக பாடுபடுவதே என்று பேதுரு கூறுகிறார் (1 பேது. 4:15, 16).

அப்போஸ்தலனாகிய பவுல் தன் ஊழியத்தைக் குறித்து கூறுகையில் ஆச்சரியமான ஒரு தகவலை கூறினார். அதென்னவெனில், ஊழியத்தில் பவுலினுடைய பாடுகள், கிறிஸ்துவனுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக தன் மாம்சத்தில் நிறைவேற்றுவதற்காகவே என்று கூறுகிறார் (கொலோ. 1:23 – 25). கிறிஸ்துவினுடைய பாடுகளில் எப்படி ஏதாவது குறைவு இருக்க முடியும் ? நிச்சயமாகவே, கிறிஸ்துவின் பாடுகள் முழுமையாக முற்றுப்பெற்றவையே. முற்றுப்பெறவில்லையென யாரும் கூறுமுடியாது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு குறிப்பிடுவது, கிறிஸ்துவின் பாவ நிவர்த்தி வேலையை அல்ல. அது கல்வாரியில் அவருடைய ஒரே செயலால் பூரணமானதும் முழுவதும் முடிக்கப்பட்டதுமாகும். ஆனால், பவுல் இங்கு உலகத்திற்கும் கிறிஸ்துவின் திருச்சபைக்கும் பூரண ஊழியக்காரனாகவும் ஸ்தானாபதியாகவும் இருக்க விரும்பும் நோக்கில், தனது தியாகத்தையும் பாடுகளையும் குறிப்பிடுகிறார்.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இஸ்ரவேல் தேசத்தில் இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வாழ்ந்து மரித்தார். தான் சந்தித்து ஊழியம் செய்த மக்களுக்கு தேவ அன்பின் வெளிப்பாடாகவே அவர் விளங்கினார். இன்று கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். தேவனைக் காணக்கூடாத இப்போதுள்ள உலக மக்களுக்கு, தேவ அன்பின் வெளிப்பாடுகளாகவும் வாய்க்கால்களாகவும் இருக்க, இயேசுவுக்கு மனித பாத்திரங்கள் தேவை. அவரது ஊழியத்திற்காக ஒரு நபரை அவர் தெரிந்தெடுத்து அழைக்கும் பொழுது, அந்தப் பாத்திரம் ஒரு உபகரணமாகவும், உலகத்திற்கு அவரின் காணக்கூடிய வெளிப்பாடாகவும் இருக்க அவர் எதிர்பார்க்கிறார்.

அவ்வாறு செய்கையில், தெரிந்தெடுக்கப்பட்ட அந்தப் பாத்திரம், இயேசு கடந்து சென்ற அதே கடினபாடுகளையும் புறக்கணிப்பையும் கடந்துசெல்ல ஆயத்தமாயிருக்க வேண்டும். அந்தப் பாத்திரம் இயேசு பெற்றுக்கொண்ட அதே ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளவும், இயேசு பானம் பண்ணின அதே பாத்திரத்தில் பானம் பண்ணவும் வேண்டும். யோவானும் யாக்கோபும் கிறிஸ்துவில் அவர்களுடைய ஊழியங்களுக்காக பிற்காலத்தில் துன்புறுத்தப்பட்டு பாடுபட்டார்கள்.

இயேசுவின் அன்பிற்கும், ஆவிக்குரிய தன்மையின் செயல்முறை நிரூபணத்திற்கும், நேர்மறையாக ஜனங்கள் செயல்பட்டால் அற்புதமாயிருக்கும். ஆனால் இந்த உலகத்திலுள்ள மக்கள் இருளில் நடப்பதையும், வெளிச்சத்தை பொறுத்துக்கொள்ள முடியாததையும் இயேசு பலமுறை நிரூபணமாக்கியுள்ளார். அந்நிலையில் அவர்கள் சில வேளைகளில், கிறிஸ்துவோடு தங்களை அடையாளம் காண விரும்புகிறவர்களை கேலியும் பரியாசமும் செய்வதோடு அவர்களை கொல்லவும் நாடுகின்றனர்.

*பவுலின் உபத்திரவங்கள்*

பவுல் புதிய ஏற்பாட்டு பெரும் பகுதிகளை எழுதியுள்ளார். அவர் பல மகிமையான அற்புதமான விளைவுகளை தன் ஊழியத்தில் கண்டுள்ளார். அவைகள் அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களாகும். அவருடைய ஊழியத்தில் அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்காக ஆதாயமாக்கினார். அநேக திருச்சபைகளையும் ஸ்தாபித்தார். எனினும் அவர் பட்ட பாடுகளும் உபத்திரங்களும் அவர் கண்ட எண்ணி முடியாத விளைவுகளுக்கு நேர் விகிதத்தில் அமைந்திருந்தன.

மிகவும் அதிகமாய் பிரயாசப்பட்டதாகவும்; அளவுக்கு அதிகமாய் அடிக்கப்பட்டதாகவும், அதிகமாயும் அடிக்கடியும் காவலில் வைக்கப்பட்டதாகவும், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டதாகவும் பவுல் நமக்கு சொல்கிறார். ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிக்கப்பட்டுள்ளார். மூன்றுதரம் மிலாறுகளால் அடிக்கப்பட்டுள்ளார். ஒருதரம் கல்லெறியுண்டு, மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்துள்ளார். கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கி உள்ளார். எல்லா வகையான மக்களாலும், எல்லா வகையான சூழ்நிலைகளிலும் மோசங்களில் அகப்பட்டுள்ளார். பிரயாசத்திலும், வருத்தத்திலும், கண் விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், உபவாசத்திலும், குளிரிலும், நிர்வாணத்திலும், தன் வாழ்வில் இருந்த தேவ அழைப்புக்கு உண்மையுள்ளவராகவே நிலைத்திருந்தார் (2 கொரி. 11:23 – 28).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

பவுல் ஏன் இவைகள் எல்லாவற்றின் வழியாகவும் கடந்து சென்றார்? இவைகள் எல்லாவற்றிலும் அவருக்கு லாபம் என்ன? அதிக கல்வி கற்றவரும் தனது கூடார தொழிலில் திறமையுள்ளவருமாய் இருந்த பவுல், ஒரு செல்வ சுக வாழ்வை அனுபவித்திருந்திருக்க முடியும். நாம் காணும் இதற்கான காரணம் என்னவென்றால், அவர் வாழ்வில் இருந்த தேவ அழைப்பே. அது மட்டுமல்லாமல் தனது தியாகத்தின் பலனை மற்றவர்கள் அறுவடை செய்யவும், தனது ஊழியம் இயேசுவுக்காக பாடுபடவதற்கான அழைப்பே என்றும் பவுல் விளங்கியிருந்ததுமேயாகும். எனினும் இவைகளெல்லா வற்றிலும் பவுல் தொடர்ந்து சொல்லதென்னவெனில், தான் மிகவும் அதிகமாய் நேசிக்கும் ஆத்துமாக்களுக்காக உற்சாகமான மகிழ்ச்சியோடு செலவு பண்ணவும் செலவு பண்ணப்படவும் விரும்புவதேயாகும் (2 கொரி. 12:15).

ஊழியத்தில் ஒன்றுமே செய்யாமல் எதையும் பெற்றுக்கொள்ள முடியாது என்று பவுல் விளங்கிக் கொண்டிருந்தார். மற்றவர்கள் எளிதாக பெற்றுக்கொள்ள யாரோ ஒருவர் கஷ்டத்தை அனுபவித்து, கிரயம் செலுத்தியாக வேண்டும். ஊழியத்திலே ஊழியர் தான் அந்த கிரயத்தை செலுத்தியாக வேண்டும். கர்த்தராகிய இயேசுவின் ஜீவன் தன் சரீரத்திலே விளங்கும்படி இயேசுவின் மரணத்தை (பாடுகளின் ஞானஸ்நானம்) எப்பொழுதும் தன் சரீரத்தில் சுமந்துகொண்டு இருந்ததை பவுல் சொன்னார் (2 கொரி. 4:10). பாடுகளின் ஞானஸ்நானமாகிய பவுலின் ஒப்புமை இயலில், மற்றவர்கள் வாழ்வில் ஜீவன் செயலாற்றும்படி தன் சரீரத்தில் மரணம் செயல்படுவதாக கூறினார் (2 கொரி. 4:12)

*ஊழியர்களுக்கான அழைப்பு*

சுலபமான, செல்வ சுகமான, ஊழியத்தை உத்தியோகமாக மட்டுமே நினைக்கும் வாழ்விற்கு தேவன் நம்மை அழைக்கவில்லை என்பதை மட்டும் ஊழியர்கள் இன்று விளங்கிக்கொண்டால், இதுவரைக்கும் ஊழியத்தில் செய்து முடித்ததைக் காட்டிலும் அதிகமாக செய்து முடிக்கப் பட்டிருக்கும். இயேசுவை முன் உதாரணமாக வைத்து, அவரைப் போல எல்லா ஊழியர்களும் தாங்கள் செய்யும் ஊழியத்திலுள்ள தங்கள் ஆடுகள் ஆசீர்வதிக்கப்படும்படி, அவைகளுக்காக கிரயம் செலுத்தி இயேசுவைப் போல தியாக வாழ்க்கை வாழ்வார்களானால், இன்றைய திருச்சபை ஏற்படுத்தும் நல்ல தாக்கத்தினால் உலகமே அசைக்கப்படும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். ஆனால் சோகக் கதை என்னவெனில், நல்ல விளைவுகளுக்கு கிரயம் செலுத்தாமலேயே நல்ல விளைவுகளை எதிர்பார்க்கும் அநேகர் இருப்பதுதான்.

பாடுகளின் களிகூறுதலில் களிகூறுவதற்காக, பாடுகளின் ஞானஸ்நானம் தேவ கிருபையையும், தேவ அபிஷேகத்தையும், தேவ திறமையையும் பகிர்ந்தளிக்கிறது. ஊழியத்தின் தியாகங்களும் பாரங்களும் பாரமாகத் தோன்றாமல், மகிழ்ச்சியாகவும் சிலாக்கியமாகவும் தோன்றும். ஊழியத்தில் இருப்பதென்பது கண்ணாடி வீட்டில் வாழ்வதைப் போன்றதாகும் – உங்களது வாழ்க்கை பின்பற்றப்படவேண்டிய உதாரணமாக எப்பொழுதும் கண்காணிக்கப்படுகிறது. ஊழியத்திற்கு புதிதாய் வந்தவர்களுக்கு இந்த முறையில் வாழ்வதென்பது சங்கடமான காரியமாயிருக்கக் கூடும். ஆனால் போதுமான அளவு பாடுகளின் ஞானஸ்நானம், சீரிய முன் உதாரண வாழ்க்கை வாழ தேவையான கிருபையை பகிர்ந்தளிக்கும்.

'உங்களுக்காக நான்படும் பாடுகளில் களிகூறுகிறேன்'. என்று பவுலைப்போல சொல்லக்கூடிய நிலைக்கு நாம் வரவேண்டும். தமக்கு முன்வைக்கப்பட்ட மகிழ்ச்சியின் பொருட்டு, இயேசு சிலுவையின் பாடுகளை சகித்தார் (எபி. 12:2). சில ஊழியக்காரர்கள் ஊழியத்திற்காக கிரயம் செலுத்துகையில் காடியினால் ஞானஸ்நானம் பெற்றதுபோல காட்சியளிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு தேவையோ பாடுகளின் மற்றும் மகிழ்ச்சியின் ஞானஸ்நானமே.

மற்றவர்கள் வாழ்வதற்காக ஊழியக்காரர்கள் சாகும் கலையை தாங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் (2 கொரி. 1:12). ஊழியத்திற்கு அழைப்பு என்பது தியாகம் செய்வதற்கும் தங்களையே அசௌகரியத்திற்கு உள்ளாக்கிக் கொள்வதற்கும், தங்களையே பலியாகக்கொல்லுவதற்கும்,

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

இணங்குவதற்கும், அர்ப்பணிப்பதற்கும், தத்தம் செய்வதற்கும், இலவசமாய் கொடுப்பதற்கும், கிறிஸ்துவின் சரீரத்திற்கு நம்மையே கொடுப்பதற் குமான அழைப்பாகும்.

நமது ஊழியம் யோவான் ஸ்நானகனைப் போன்றது; மற்றவர்கள் எளிதாக கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு வழியை ஆயத்தப்படுத்துவதும், கடின வழிகளை மென்மையாக்குவதும், மலைகளையும் குன்றுகளையும் சமப்படுத்துவதுமேயாகும். நமது இரத்தத்தையும், வேர்வையையும் கண்ணீரையும் ஊற்றி, மற்றவர்கள் இயேசுவினிடம் வருவதற்கு தடையோ, இடையூரோ இல்லாதபடி வழியில் உள்ள கற்களையும் பாறைகளையும் பொறுக்கிப்போட வேண்டும்.

பாடுகளின் பாத்திரத்தில் குடிப்பதென்பது முழுநேர ஊழியக்காரருக்கோ அல்லது மற்றவர் களுக்கோ, ஏதாவது சில வழிகளில் ஊழியத்தில் ஈடுபடுகின்ற அனைவருக்குமே பொருந்துவதாக உள்ளது. எல்லா கிறிஸ்தவ ஊழியமும் நமது மிகச் சிறப்பானதை – நமது ஆவிகள், ஆத்துமாக்கள், சரீரங்கள் எஜமானனுக்கு கொடுக்கும் தெரிந்தளிப்பாகவே காணப்பட வேண்டும். நாம் நித்தியத்தின் கடற்கரையை அடைந்து, நமது தியாகங்களுக்கும் மற்றவர்களுக்கு செய்த சேவைக்கும் நாம் அவரிடமிருந்து பெறும் கிரீடங்களாகிய நித்திய பலன்கள் அளவிடக்கூடாத தாயிருக்கும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *அத்தியாயம் 2*

# கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானம்

கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானம் என்பது 'மறுபடியும் பிறந்த' அனுபவமாக அறியப்படுகிறது. நாம் மறுபடியும் பிறக்கும் பொழுது, தேவன் நம்மை கிறிஸ்துவின் சரீரத்திலே வைக்கிறார். தேவன் நமது நித்திய தகப்பனாக, நாம் தேவ குடும்பத்திலே அங்கமாகிறோம். இயேசுவை நமது வாழ்வில் ஆண்டவராகவும் இரட்சகராகவும் வரவழைக்கும் பொழுது, இந்த ஞானஸ்நானம் ஆவிக்குரிய நிலையில் நம் வாழ்வில் நடைபெறுகிறது. பின்வரும் மூன்று ஞானஸ்நானங்களில் உள்ள வித்தியாசத்தை கவனியுங்கள்:

சரீர ஞானஸ்நானத்தில், பரிசுத்த ஆவியானவர் (ஞானஸ்நானம் கொடுப்பவர்) நம்மை (ஞானஸ்நானம் பெறுபவர்) எடுத்து கிறிஸ்துவின் சரீரத்திலே (ஞானஸ்நானத்தில் வைக்கப்படும் இடம்) வைக்கிறார்.

தண்ணீர் ஞானஸ்நானத்தில், ஊழியக்காரர் (ஞானஸ்நானம் கொடுப்பவர்) நம்மை (ஞானஸ்நானம் பெறுபவர்) எடுத்து தண்ணீருக்குள் (ஞானஸ்நானத்தில் வைக்கப்படும் இடம்) வைக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தில், இயேசு (ஞானஸ்நானம் கொடுப்பவர்) நம்மை (ஞானஸ்நானம் பெறுபவர்) எடுத்து பரிசுத்த ஆவியானவருக்குள் (ஞானஸ்நானத்தில் வைக்கப்படும் இடம்) வைக்கிறார்.

'மறுபடியும் பிறத்தல்' மற்றும் 'மனந்திரும்புதல்' என்ற பதங்கள் இன்று அதிகமாக பயன்படுத்தப்படுவதால் சராசரி கிறிஸ்தவனுக்கு 'சரீர ஞானஸ்நானம்' என்ற பதம் பரிட்சையமானதல்ல. எனினும் 'சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டோம்' என்ற பதங்கள் புதிய ஏற்பாட்டு மக்களால் பயன்படுத்தப்பட்ட சாதாரண வார்த்தைகளே. அப்போஸ்தலனாகிய பவுல் தனது எழுத்துக்களிலும் நிருபங்களிலும் அடிக்கடி இப்பதத்தை பயன்படுத்தியுள்ளார் (ரோம. 6:3–6). 'சரீரத்தில் ஞானஸ்நானம் பெறப்படுதல்' என்ற பதங்கள் 'மறுபடியும் பிறத்தல்' மற்றும் 'மனம்திரும்புதல்' என்ற பதங்களுக்கு ஒத்த வார்த்தைகளே என்பதை இந்த பாடத்தில் தயவு கூர்ந்து கவனியுங்கள்.

### *'மறுபடியும் பிறத்தலின்' அனுபவம்*

'மறுபடியும் பிறத்தலின்' அனுபவம் என்பது மனதின் ஒரு அனுபவமல்ல, ஆனால் அது ஆவிக்குரிய ஒரு அனுபவம். இந்த அனுபவத்தோடு வரும் உணர்ச்சி சம்பந்தப்பட்ட உணர்வுகள் காணக்கூடாமலிருக்கலாம். வித்தியாசப்பட்ட தனிநபர்களுக்குள் நடைபெறும் பரிசுத்த ஆவியானவருடைய செயல்பாட்டின் பக்க விளைவுகளை சார்ந்து, ஒரு ஆவிக்குரிய அனுபவத்தை புலன்கள் உணரலாம் அல்லது உணராமலும் இருக்கலாம். மறுபடியும் பிறக்கும் பொழுது சிலர் அழுகிறார்கள், மற்றவர்கள் ஆராதனையில் அமைதியாக இருக்கிறார்கள். நமது கைவிரல் ரேகைகள் எந்த அளவு மாறுபடுகின்றதோ அந்த அளவு இந்த எல்லா உணர்ச்சி அனுபவங்களும் மாறுபடுகின்றன. எனினும் மறுபடியும் பிறக்கும் அனுபவத்தின் அடையாளமாக, எல்லாருக்கும் எல்லா அனுபவங்களிலும் கண்டிப்பாக இருக்க வேண்டிய பொதுவான அறிகுறிகள் சில உள்ளன.

1. தேவன் நம்மில் அன்பு கூறகிறார் என்ற அனுபவம். தேவ அன்பு இயேசுவின் மூலமாக மனுக்குலத்திற்கு வந்து சேருகிறதே சுவிசேஷமாகும். சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்வதென்பது தேவ அன்பை ஏற்றுக்கொண்டு அவரது நிபந்தனையற்ற அன்பை அனுபவிப்பதாகும் (யோவா. 3:16). பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவ அன்பு நமது இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (ரோம. 5:5).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

2. நமது எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்ட அனுபவம் (எபே. 1:7). நமது வாழ்வில் பாவங்களினால் குற்ற உணர்வோடிருந்த மனசாட்சி, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுகிறது (எபி. 9:14). சுத்திரிகரிக்கப்பட்ட மனசாட்சி தேவனோடு சமாதானத்தை அனுபவிக்கிறது (ரோம. 5:1).

3. நித்திய ஜீவனின் நிச்சய அனுபவம் (ரோம. 6:23). மரணத்தின் மற்றும் அடுத்த வாழ்வின் பயமும் முற்றிலும் வேரறுக்கப்பட்டாயிற்று (எபி. 2 15).

4. நமது வாழ்வில் தேவ விசுவாசத்தின் ஒரு அளவு பகிர்ந்தளிக்கப்படுகிறது (ரோம. 12:3). இந்த விசுவாச அளவு வேதவசன தியானத்தினால் போ**ஷி**க்கப்பட்டு பெருக வேண்டும் (ரோம. 10:17).

5. புதிய சுபாவம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆண்டவரும் இரட்சகருமாக இயேசு நம் வாழ்வில் வரும்பொழுது தேவ வித்து (சுபாவம்) நமக்குள் ஊன்றப்படுகிறது (1 யோவா. 4:9). நாம் இப்பொழுது புதிய சிருஷ்டி (கிரேக்க மொழியில் – புதிய இனம்) (2 கொரி. 5:17).

6. வாழ்விற்கு புதிய நோக்கமும் அர்த்தமும் உள்ள ஒரு அனுபவம் (எபே. 1:11, 12; 2:10). வாழ்வு இனிமேல் வேலை செய்வது, சாப்பிடுவது, தூங்குவது, வாழ்வை அனுபவிப்பது என்பவைகளில் இருப்பதில்லை (ரோம. 14:17). சர்வ சிருஷ்டிகளுக்கும் ஒரு நித்திய நோக்கம் உள்ளது.

7. உள்ளே உள்ள அபிஷேகத்தின் ஒரு அனுபவம் (1 யோவா. 2:27). இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வாழ்கிறார் (1 யோவா. 3:24). இப்பொழுது நீங்கள் தேவபிள்ளை என்று பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய ஆவியோடு சாட்சி கொடுக்கிறார் (ரோம. 8:16).

*ஆவிக்குரிய வளர்ச்சியில் தொடர்வது*

ஆவிக்குரிய வளர்ச்சியில் தொடர்வது மேற்கூறிய பட்டியலை படித்தபின்பு, உண்மையாகவே தாங்கள் மறுபிறப்படைந்திருக்கிறோமா என்று சில கிறிஸ்தவர்கள் ஆச்சரியப்படக்கூடும். கவலைப்பட வேண்டாம். இயேசுவை உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ள நீங்கள் தீர்மானம் செய்திருந்தால் நீங்கள் மறுபடியும் பிறந்தவரே. உங்கள் வாழ்வில் குறைவு பட்டிருப்பது என்னவெனில், உங்களது மறுபிறப்பின் அனுபவத்தில் என்ன நடந்தது என்று நீங்கள் அறிந்து கொள்ள உதவும் போதனையே.

இந்த அனுபவத்திற்குப் பிறகு, நமது ஆவிக்குரிய வளர்ச்சி தொடர்வது அவசியமாயிருக்கிறது. அப்படி ஆவிக்குரிய நிலையில் வளர்வதற்கு, ஆவிக்குரிய உலகத்திற்கு சம்மந்தப்பட்ட நமது பகுதிகளை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். நமது பௌதீக சரீரங்கள், உறுப்புகள், திசுக்கள் மற்றும் செல்களாளானவை. நம்மைச் சுற்றியுள்ள பௌதீக உலகத்தை நாம் அனுபவிக்க முகர்தல், சுவைத்தல், தொடுதல், பார்த்தல் மற்றும் கேட்டல் ஆகிய ஐம்புலன்கள் ஆகியவைகளோடு அவைகள் ஒன்று சேர்ந்து நமக்கு உதவுகின்றன.

நமது ஆத்துமாவில் நமது சிந்தை, உணர்ச்சிகள் மற்றும் சித்தம் இருக்கின்றன. நமது ஆத்துமாவின் இந்த மூன்று பகுதிகளும் நமது ஆவி மனிதனுக்கு கீழ்படுத்தப்படவேண்டும். மனசாட்சி (Conscience), காரணகாரியங்களற்ற உள்ளுணர்வு (Intuition), அந்நியோன்ய ஐக்கியம் (Communion) ஆகியவை நமது ஆவியில் உள்ளன. இந்த மூன்று பகுதிகளும் அதிகமாக

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

முன்னேற்றமடைய வேண்டியது அவசியமாயுள்ளது. அப்பொழுதுதான் நாம் ஆவிமண்டலத்தில் செயல்படமுடியும், மற்றும் ஆவிக்குரிய காரியங்களில் நம் ஆத்துமாக்களை கட்டுப்படுத்தி பயிற்சி கொடுக்கவும் முடியும்.

தனது ஆவிக்குரிய வாழ்வில் மனசாட்சியின் முக்கியத்துவத்தைப்பற்றி பவுல் பேசுகிறார். பரிசுத்த ஆவியானவரோடு சேர்ந்து சாட்சி கொடுக்க அவர் தனது மனசாட்சிக்கு அதிகமாக பயிற்சி கொடுத்துள்ளார் (ரோம. 9:2). சுத்த மனசாட்சியோடு தேவனை சேவித்தார் (2 தீமோ. 1:4). ஒரு சுத்தமனசாட்சி ஆவிக்குரிய கப்பற்சேதத்தை தடுக்கிறது (1 தீமோ. 1:19).

காரணகாரியங்களற்ற உள்ளுணர்வு என்பது, மனதிற்கு அப்பாற்பட்டவைகளையும் மேலானவைளையும் அறியும் உள்ளுணர்வு ஆகும். சில காரியங்களை விளங்கிக்கொள்ளாமலேயே கிறிஸ்தவர்களாக நாம் அவைகளை அறிய முடியும். ஏன் ஒரு காரியம் தவறு என்று சில காரியங்களை நமது மனது விளங்கிக் கொண்டு தீர்மானிப்பதற்கு முன்பே, அவைகள் சரியானதா அல்லது தவறானதா என்று நாம் ‘உணர்ந்து’ கொள்ளமுடியும். நமது ஆவி ‘உணர்ந்து பெற்றுக்கொள்ள’ முடியும். கப்பற்பயணம் சேதமுண்டாக்குமளவிற்கு ஆபத்தானது என்று பவுல் உணரமுடிந்தாலும், நூற்றுக்கதிபதியை இணங்கச்செய்ய முடியவில்லை (அப். 27:10). நூற்றுக்கதிபதியும் மாலுமியும் பிரயாணத்திற்கேற்ற மிகச் சரியான நேரம் இதுதான் என்று, தங்களது இயற்கை உணர்வு அறிவையும் தங்கள் சிந்தனைகளையுமே நம்பி செயல்பட்டனர் (அப். 27:11, 12). நமது காரணகாரியங்களற்ற உள்ளுணர்வை நாம் பயிற்றுவிக்க இயலும் (எபி. 5:14).

அந்நியோன்ய ஐக்கியம் என்பது, தேவ பிரசன்னத்தை உணர்ந்து அவரை ஆராதிக்கும் திறமையாகும். ஆராதனை, ஜெபம், தியானம் இவைகளால் தேவ பிரசன்னத்தின் உணர்வு நமது வாழ்வில் வளர்ந்து முன்னேற வேண்டும். தங்கள் வாழ்வில் அந்நியோன்ய ஐக்கியம் சரியாக வளர்ச்சி அடைய கூடாதபடி சில கிறிஸ்தவர்கள் பயம் நிறைந்தவர்களாயும், பிசாசின் உணர்வுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். மற்றவர்கள் இந்த உலகின் அலுவல்களில் அதிகம் மூழ்கிப் போயிருப்பதால், அந்நியயோன்ய ஐக்கியம் அவர்கள் வாழ்வில் பலவீனமாயுள்ளது. ஸ்தேவான் உறுதியான அந்நியோன்ய ஐக்கியத்தை வளர்த்திருந்தபடியால், பரிசேயரின் வாக்குவாதங்கள் மற்றும் பற்கடிப்புகளின் மத்தியிலும் அவன் தேவனுடைய மற்றும் இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தை மட்டுமே உணரக்கூடியவனாயிருந்தான் (அப். 7:54, 55). அந்நியோன்ய ஐக்கியம் என்பது பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தினால் வளர்ச்சியடைகிறது (2 கொரி. 13:14).

சரீரத்திற்குள்ளான ஞானஸ்நானம் என்பது புதிய நடை, புதிய வாழ்வு என்பதின் ஒரு ஆரம்பம் மட்டுமே (ரோம. 6:4). ஆழமான ஆவிக்குரிய வளர்ச்சியில் ஈடுபடுவதும், அதில் தொடர்ந்து செல்வதுமே, நாம் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு வழிநடத்தும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

## அத்தியாயம் 3

# தண்ணீரில் ஞானஸ்நானம்

தண்ணீரில் ஞானஸ்நானம் என்பது வெறும் ஒரு அடையாளமே, அது நம்மை இரட்சிப்பதில்லை. எனினும் இந்த தெய்வீக ஒழுங்கிற்கு கீழ்ப்படிவது பல ஆசீர்வாதங்களை கொண்டுவரும் என்பதை நாம் காண்போம். ஆண்டவரை ஏற்றுக்கொள்ள கொடுக்கப்படும் அழைப்புகள், கிறிஸ்தவத்தின் ஆரம்ப நாட்களில் கைகளை உயர்த்தச் சொல்லியோ அல்லது அவர்களை முன்பகுதிக்கு வரச்சொல்லியோ நடப்பிக்கப்படவில்லை. ஒரு நபர் தனது தீர்மானத்தை செயல்படுத்த நவீன திருச்சபை கையாளும் நடைமுறைகள் இவைகளே. இவைகள் நல்லவைகளும் உற்சாகப்படுத்தப்பட வேண்டியவைகளுமே.

கிறிஸ்துவை பின்பற்ற மக்கள் எடுத்த தீர்மானத்தை ஞானஸ்நான அடையாளத்தின் மூலமே புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நிறைவேற்றினர். இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்ட விசுவாசத்தை நடைமுறைப்படுத்திய முறை இதுதான். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக கைகளை உயர்த்துவதும் மற்றும் ஒப்புக்கொடுக்க பலிபீட பகுதிக்கு வருவதும் ஆகிய இக்கால முறைகளை கையாளுவதால், தங்கள் தீர்மானத்தை செயல்முறைப்படுத்திவிட்டதாக நவீன கிறிஸ்தவர்கள் நினைக்க ஏதுவாகிறது. எனவே ஞானஸ்நானத்திற்கு தொடர்ந்து செல்லாமல் அதிலுள்ள ஆசீர்வாதங்களை இழக்கின்றனர்.

### *ஒரு தெய்வீக ஒழுங்காக தண்ணீர் ஞானஸ்நானம்*

இரட்சிப்புக்கு தண்ணீர் ஞானஸ்நானம் அவசியமென்று தவறாக வழிநடத்தப்பட்ட சில கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். அப்படியிருக்குமானால், சிலுவையிலிருந்த கள்ளனுக்கு தண்ணீர் ஞானஸ்நானம் பெற வாய்ப்புக் கிடைக்காததால் பரதீசுக்குள் சென்றிருந்திருக்க முடியாது (லூக். 23:43). தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே கொர்நெலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் (இரட்சிப்புக்குப் பிறகே பெற்றுக்கொள்ள இயலுவது) பெற்றனர். ஏனெனில் வேதவாக்கியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல (அப். 10:44–47).

விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்று மாற்கு பதினாறாம் அதிகாரத்தில் இயேசு சொன்னதாக அப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் மேற்கோள் காட்டுகிறார்கள் (மாற். 16:16). விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று அந்த வசனத்தின் மறுபகுதியை குறிப்பிட அவர்கள் மறந்துவிட்டார்கள். ஞானஸ்நானம் பெறாததினாலல்ல, விசுவாசியாததினால் மட்டுமே நாம் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுகிறோம் அல்லது நித்தியமரணத்திற்கு நியாயந்தீர்க்கப்படுகிறோம். ஞானஸ்நானம் பெறாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுவார்கள் என்று இயேசு சொல்லவில்லை. ஆனால் விசுவாசியாதவர்களே ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுவார்கள் என்று மட்டுமே இயேசு சொன்னார்.

ஒரு நபர் மறுபடியும் பிறவாமல் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்பொழுது அவர் பாவியாக – நனைந்த பாவியாகவே இருப்பார். தண்ணீர் ஞானஸ்நானம் மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் பதிலாக இருப்பதாக பவுல் தனது நிருபத்தில் எழுதுகிறார் (1 பேது. 3:20, 21). வெளிப்பிரகாரமான தெய்வீக ஒழுங்குகளால் நாம் இரட்சிக்கப்படாமல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிலுள்ள நமது விசுவாசத்தால் இரட்சிக்கப்படுகிறோம்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

### *ஞானஸ்நான முறை*

'ஞானஸ்நானம்' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டு கிரேக்க மொழியில் 'மூழ்குதல்' என்று அட்சரப்பொருளில் உள்ளது. மூழ்குதல் தான் ஞானஸ்நான செயல்முறை என்பது ஏன் என்று புதிய ஏற்பாடு குறிப்பிடுவதற்கு நான்கு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவது, 'ஞானஸ்நானம்' என்பதன் மூல வார்த்தையின் 'பேப்டிட்சோ' அர்த்தத்தை நாம் கண்டதிலுள்ளது. 'பேப்டிட்சோ' என்பதன் அட்சரப் பொருள் தோய்த்தல், அமிழ்த்துதல், முழுக்குதல், மூழ்கடித்தல், முழுகுதல் மற்றும் ஞானஸ்நானத்தில் பயன்படும் பொருளால் முழுவதும் சுற்றப்படுவது அல்லது போர்த்தப்படுவதாகும்.

புதிய ஏற்பாட்டில் தண்ணீர் ஞானஸ்நானம் செயல்முறைப்படுத்தப்பட்டபோது, எப்போதுமே அதிகமான தண்ணீர் தேவையாயிருந்தது என்பது இரண்டாவது காரணமாகும். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு தண்ணீர் அதிகமாயிருந்த ஒரு இடத்தையே யோவான் ஸ்நானகன் தெரிந்தெடுத்தார் (யோவா. 3:23). தண்ணீர் ஞானஸ்நானம் என்பது மூழ்குதல் என்ற செயல் முறையில் இல்லாமல் வேறு ஏதாவது முறையில் நடைபெற்றிருந்தால் அதிகமான தண்ணீருக்கு தேவை இருந்திருக்காது.

மூன்றாவது, தண்ணீர் ஞானஸ்நானத்தை விவரிக்கும் சொற்றொடர் மூழ்குதலை குறிக்கிறது. இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகு தண்ணீரிலிருந்து கரையேறினார் (மாற். 1:10). இயேசு தண்ணீரில் முழுக்கப்பட்டதை 'மேலே' மற்றும் 'அதிலிருந்து' ஆகிய இரண்டு சொற்றொடர்கள் ஒன்று சேர்ந்து குறிக்கிறதை கிரேக்க புதிய ஏற்பாடு பயன்டுத்துகிறது. எத்தியோப்பிய மந்திரி 'தண்ணீருக்குள் இறங்கி' 'தண்ணீரிலிருந்து கரையேற' வேண்டியிருந்தது (அப். 8:38, 39).

கடைசியாக, இயேசுகிறிஸ்துவில் நமது மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலை ஞானஸ்நானம் வெளிப்படையாக காண்பிக்கிறது (ரோம. 6:4, 5). நமது வாழ்வில் இயேசுவினுடைய இந்த எல்லா மூன்று வேலைகளின் அம்சங்களையும் ஏற்றுக் கொள்வதில் முழுகுவதைத் தவிர வேறு எந்த நல்ல வழியிருக்க முடியும்? ஒரு நபர் மரிக்கும் பொழுது, அவர்கள் மேல் மணலை தெளிப்பதில்லை அவர்களை புதைக்கிறோம்.

### *தண்ணீர் ஞானஸ்நான செயல்முறை*

'பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க' தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்து இயேசு கட்டளை கொடுத்ததை புதிய ஏற்பாட்டில் கண்கிறோம். (மத். 28:19). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே சீஷர்கள் ஞானஸ்நானம் கொடுத்ததை, அப்போஸ்தலர் நடபடிகளிலே நாம் காண்கிறோம் (அப். 2:38; 8:15; 10:48; 19:5). முழுதிரித்துவத்திற்கும் இயேசுகிறிஸ்துவின் நாமம் மட்டுமே நாமம் என்று உரிமை கொண்டாடி, இயேசுவின் நாமத்தினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானமே சரியானதென்று சில கிறிஸ்தவர்கள் வற்புறுத்துகின்றனர்.

இந்தக் குழுவினரை நீங்கள் நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்ததெனில், அவர்கள் வற்புறுத்துவதன் அடிப்படை, வேதத்தின்படி செய்யவேண்டுமென்ற ஆசையினால் அவர்கள் அப்படிச் சொல்லாமல், திரித்துவத்தையே அந்த குழுவினர் விசுவாசியாமல் இவ்வாறு போதிக்கிறார்கள். (இந்த தொடர் போதனைகளில் 13 ஆம் தொகுப்பில் திரித்துவத்தைக் குறித்து போதிப்போம்).

இரண்டு செயல்முறைகளின் அடிப்படையுமே வேதவாக்கியங்களில் இருப்பதால், உண்மையில் இரண்டுமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. எனினும் இரண்டு வேதவாக்கிய பகுதிகளையும்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

ஒன்றாக கட்டிச் சேர்த்து, நான் தனிப்பட்ட முறையில் 'பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே' என்ற செயல்முறையில் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்.

### *ஒரு தெய்வீக ஒழுங்கின் முக்கியத்துவம்*

கர்த்தருடைய இராப்போஜனமும் தண்ணீர் ஞானஸ்நானமும் கிறிஸ்தவ தெய்வீக ஒழுங்காக அறியப்படுகின்றன. அவைகள் அடையாளங்களாக மட்டும் இருப்பதனால், அவைகள் முக்கிய மானவைகள் அல்ல என சில கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். அது நடுநிலைமையிலிருந்து ஒருபுறம் அதிகமாக சாயும் தன்மையுள்ளது. கர்த்தருடைய இராபோஜனத்தை தகுதியற்ற நிலையில் அனுசரிப்பது, மரணத்தை கொண்டுவரும் என்பது வெளிப்படையானதே (1 கொரி. 11:27–30).

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய வார்த்தைக்கும் கட்டளைகளுக்கும் நியமங்களுக்கும் கீழ்ப்படிந்தால், அவர்கள் சுகவீனமடைவதில்லையென்று தேவன் பழைய ஏற்பாட்டில் சொன்னார் (யாத். 15:26). அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிதல் என்பது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிவதாகும். அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் என்பது அவருடைய வார்த்தையிலுள்ள எல்லா சனமார்க்க மற்றும் சர்வ கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவதாகும். அவருடைய நியமங்களுக்கு கீழ்படிதல் என்பது தேவன் நியமித்துள்ள மத அடையாளத்துவங்கள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிவதே. பஸ்காவின் அடையாளத்தைக் கைக்கொள்வது, இஸ்ரவேலருக்கு நியமங்களில் ஒன்றாகும் (யாத். 13:10). தேவனுடைய நியமங்களை கைக்கொள்வதில் ஆசீர்வாத முள்ளது.

புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு தேவனுடைய நியமங்களை கைக்கொள்வது கர்த்தருடைய இராபோஜனத்திலும் தண்ணீர் ஞானஸ்நானத்திலும் உள்ளது. தண்ணீர் ஞானஸ்நானம் இரட்சிப்பை தீர்மானிப்பதில்லை. ஆனால், நிச்சயமாகவே ஆசீர்வாதங்களை தீர்மானிக்கிறது. தேவனுடைய சன்மார்க்க சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய ஆவியானவருக்கு கீழ்ப்படிய உங்களாலானதெல்லாம் செய்யும் ஒரு நல்ல கிறிஸ்தவராக நீங்கள் இருக்கலாம். ஆனால் நீங்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறாவிட்டால், அவருடைய நியமங்களுக்கு கீழ்ப்படியவில்லை. நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு கீழ்படிவதில் பூரணராயிருப்போமாக.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 4*

# பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நனம் என்ற உபதேசம், சரீரத்திற்குள்ளான ஞானஸ்நானம் என்ற உபதேசத்தோடு அடிக்கடி குழப்பப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஒரு நபர் மறுபடியும் பிறந்த அனுபவத்தை பெற்றுக்கொள்ளும்பொழுது, பரிசுத்த ஆவியானவரிலும் தானாகவே அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதாக சிலர் போதிக்கின்றனர். பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் என்பது, தானாகவே வரும் அனுபவம் என்ற இந்த போதனைக்கு எதிராக, வேதம் மிகவும் தெளிவாக காண்பிக்கிறது. சில நேரங்களில் மறுபடியும் பிறந்த அதே நேரத்தில் பரிசுத்த ஆவியானவரிலும் ஞானஸ்நானம் பெற்றனர். ஆனால், பல நேரங்களில் அப்படிப்பட்ட போதனை கொடுக்கப்படாததால் அவர்கள் அதை பெற்றுக்கொள்வதில்லை.

*ஆவியானவரின் ஞானஸ்நானத்தில் ஐந்து நிகழ்வுகள்*

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாகவே இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள், மறுபடியும் பிறந்த அனுபவத்தையும் பரிசுத்த ஆவியானவர் உள்வசிக்கும் அனுபவத்தையும் பெற்றனர். இயேசு அவர்கள்மேல் ஊதி, தேவ வார்த்தையை அறிந்துகொள்ளும்படி அவர்கள் மனதை திறந்தார் (யோவா. 20:22; லூக். 24:49). நாற்பது நாட்களுக்குப் பிறகுதான், பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்று அந்நிய பாஷையில் பேசினர் (அப். 1:5–8; 2:4).

சமாரியர்கள் இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு, பிலிப்பு வினால் தண்ணீரிலும் ஞானஸ்நானம் பெற்றனர் (அப். 81:2). இதற்கு சிலநாளைக்குப் பிறகு எருசலேமிலிருந்து வந்த பேதுருவும் யோவானும் அவர்களை பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திற்கு வழிநடத்தினர் (அப். 8:17).

தமஸ்குவுக்குப் போகும் வழியில் பவுல் மறுபடியும் பிறந்தார். அவர் மறுபடியும் பிறந்த பிறகு, இயேசு அவரை ஊழியத்திற்கு கட்டளை கொடுத்து அனுப்பினார் (அப். 26:16). மறுபடியும் பிறக்காத ஒருவரை இயேசு கட்டளை கொடுத்து ஊழியத்திற்கு அனுப்பமாட்டார். மேலும், இயேசுவை பவுல் சந்தித்தபோது அவரை 'ஆண்டவரே' என்றழைத்தார் (அப். 9:5). பவுல் தனது தனிப்பட்ட சாட்சியை பகிர்ந்துகொள்கையில் தனது கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பத்தையும், தமஸ்குவுக்குப் போகும் வழியில் தான் பெற்றுக்கொண்ட ஊழியத்திற்கான பரம தரிசனத்தின் ஆரம்பத்தையும் பின்நோக்கிப் பார்க்கிறார் (அப். 26:19). மேலும், 'சகோதரனாகிய சவுலே', என்று அனனியா அவரை அழைத்தார் (அப். 9:17). தான் மனந்திரும்பிய மூன்று நாட்களுக்குப் பிறகுதான், பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானத்தை பவுல் பெற்றுக்கொண்டார் (அப். 9:9).

கொர்நெலியுவும் அவன் வீட்டாரும் பரிசுத்தாவியானவரில் ஞானஸ்நானத்தையும் மறுபிறப்பின் அனுபவத்தையும் ஒரே நேரத்தில் பெற்றுக்கொண்டார்கள் (அப். 10:44 – 46). அந்நிய பாஷை அடையாளத்தினிமித்தம் புறஜாதிகள் பெற்றுக் கொண்டதை யூதர்கள் உறுதிப்படுத்திக்கொண்டார்கள் (அப். 10:46). பரிசுத்த ஆவியானவரில் அபிஷேகத்தையும் மனந்திரும்பின அனுபவத்தையும் ஒரே நேரத்தில் பெற்றுக்கொண்ட ஒரே ஜனம் இவர்கள்தான். இதுதான் நடைமுறை என்பதற்கு பதிலாக விதிவிலக்காகவே இது உள்ளது. இதற்கு காரணம் என்னவென்றால், கொர்நெலியுவின் வாழ்வில் வெளியரங்கமாய் காணப்பட்ட மிகப்பெரிய ஆவிக்குரிய பசிதாகமாகும் (அப். 10:1, 2) .

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட மக்களாக ஐந்தாவதும் கடைசி யானதுமான நிகழ்ச்சி எபேசியருடயதே. பவுல் முதலாவதாக அவர்களுக்கு தண்ணீர் ஞானஸ்நனம் கொடுத்தார் (அப். 19:5). பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானத்தை அவர்கள் பெற்றுக்கொள்ள, பவுல் பிறகு அவர்கள் மேல் கைகளை வைத்தார் (அப். 19:6 ). தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு உடனடியாக பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தாரோ அல்லது அவர்கள் வெளியே வந்து முதலாவது தங்கள் உடைகளை மாற்றினார்களோ, எதுவானாலும் கண்டிப்பாக பல நிமிடங்கள் கடந்து சென்றிருந்திருக்க வேண்டும்.

நாம் கவனித்த ஐந்தில் நான்கு நிகழ்ச்சிகள், மறுபடி பிறந்த அனுபவத்திற்கு பிறகுதான் ஜனங்கள் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதையும், நிச்சயமாகவே அவை இரண்டும் ஒரே அனுபவம் தான் என்று எடுத்துக்கொள்ள முடியாததையும் மேற்கண்ட ஆராய்ச்சி காண்பிக்கின்றன. மற்றும் அது தானாகவே நடைபெறுவதும் இல்லை. கொர்நெலியுவின் காரியத்தில் கூட, ஆவிக்குரிய பசிதாகத்திலும், ஜெபத்திலும், உபவாசத்திலும் அவர் செலவழித்த நேரம் தான், பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த அசைவாடுதலை அவருடைய வீட்டிலிருந்தவர்களுக்கு உண்டாக்கிற்று.

எங்களது கூட்டங்களில் ஒரே நேரத்தில் பரிசுத்த ஆவியானவரிலும் ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றதையும் பார்த்திருக்கிறோம். ஆனால் இதுதான் நடைமுறை என்பதற்குப் பதிலாக, அது ஒரு விதிவிலக்காகவே இருந்துள்ளது. கொர்நெலியுவின் அனுபவம்தான் எங்களுடையது என உரிமை கொண்டாடுபவர்களிடம், ஏன் கொர்நெலியுவைப் போல அந்நியபாஷையில் அவர்கள் பேசவில்லை ? என்பதுதான் நான் அவர்களிடம் கேட்கும் கேள்வியாகும்.

### *ஆவியானவருடைய ஞானஸ்நானத்தின் அடையாளம்*

பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றபொழுது, எருசலேமிலிருந்த நூற்றிஇருபது சீஷர்கள் எல்லாரும் அந்நிய பாஷையில் பேசினார்கள் (அப். 2:4). கொர்நெலியுவும் அவன் வீட்டார் அனைவரும் அந்நிய பாஷையில் பேசினார்கள் (அப். 10:46). எபேசிய விசுவாசிகளும் அந்நிய பாஷையில் பேசினார்கள் (அப். 19:6 ). பவுலும் அந்நிய பாஷையில் பேசினார் (1 கொரி. 14:18). சமாரியருடைய காரியத்தில் அந்நிய பாஷையில் பேசியது பதிவு செய்யப்படாவிட்டாலும், கண்டதும் கேட்டதுமான அடையாளங்கள், அங்கு உள்ளன (அப். 8:17,18). வேதத்தோடு சரியாக பொருந்தக் கூடிய நிலையில் காணக்கூடியதும் கேட்கக் கூடியதுமான அடையாளம், பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் சொன்ன, காணக் கூடியதும் கேட்கக்கூட கூடியதும் என்ற அதே அடையாளம்தான் (அப். 2:3). பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அந்நியபாஷை பேசுவதில்தான் முடிந்துள்ளது.

பரிசுத்த ஆவியானவரின் கனிதான் பரிசுத்த ஆவியானவரின் அடையாளம் என்று சிலர் சொல்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரின் கனிக்கு விரோதமாக நமக்கு எதுவுமில்லை (இந்த தொடர் போதனைகளில் 11ஆம் தொகுப்பில் இதை நாம் காண்போம்). நாம் நம்பும் உபதேசங்கள் வேத வாக்கியங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். எருசலேமிலிருந்த ஜனங்கள் நூற்றி இருபது சீஷர்களிடத்தில் கண்டது, நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவரின் கனி அல்ல, அது அந்நிய பாஷைகள்தான்! (அப். 2:7, 11). மாயவித்தைக்காரனாகிய சீமோனும் சமாரியர்களுடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவருடைய கனியை கவனிக்கவில்லை, ஆனால் அவன் கண்டதெல்லாம், செயல்முறைபடுத்தி காண்பிக்கப்பட்டதும் உடனடியாக தொடக்கூடியதுமாயிருந்த காணக்கூடிய அடையாளமே ! (அப். 8:18)

ஒரு வாழ்வின் கனியை காண நேரமெடுக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் கனி ஒருவருடைய வாழ்வில் உள்ளதா என்று தீர்மானம் செய்ய, சில நேரங்களில் நாம் அவரோடு வாழ்ந்து, வாழ்வின் சூழ்நிலைகளுக்கு அவருடைய பிரதிகிரியைகளை கவனிக்க வேண்டியுள்ளது. நமது வாழ்வின்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

கனியானது ஆண்டவராகிய இயேசுவோடு நாம் நெருங்கி நடப்பதின் விளைவும், நமது கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சி மற்றும் மறுரூபத்தின் நடைமுறைசெயல்பாடுமாகும். பரிசுத்தாவியானவரில் ஞானஸ்நானம் என்பது நாம் ஆண்டவரோடு நெருங்கி நடக்க வழி நடத்த முடியும் மற்றும் வழிநடத்த வேண்டும். ஆனால் கனியினால் ஞானஸ்நான அடையாளத்தை நாம் நியாயந்தீர்க்கும்பொழுது, கொரிந்து சபை ஆவியானவரில் ஞானஸ்நானம் பெறவில்லையென்றுதான் நாம் தீர்மானிக்க முடியும். ஏனெனில் அவர்கள் வாழ்வில் கனி இல்லை. இது உண்மையானதாக இருக்க முடியாது (1 கொரி. 1:11).

கொர்நெலியுவின் காரியத்தில், புறஜாதிகள் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதை, நிச்சயமாகவே அவர்கள் வாழ்வில் இருந்த கனிகள் யூதர்களை நம்பவைக்கவில்லை. எப்படியும் கனியை கவனிக்க போதிய நேரம் இல்லை. எனவே அவர்கள் அவர்களை அறிந்திருக்கமுடியாது. எனினும் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்ட அதே வகையில்தான் அவர்கள் நிச்சயமாகவே பெற்றுக் கொண்டார்கள் என்று பேதுரு முடிவெடுத்தார் (அப். 11:15 – 17). அந்நிய பாஷைகள் தான் அவர்களை நம்பவைத்தன (அப். 10:46).

ஆயினும் பரிசுத்த ஆவியானவரில் பெறும் ஞானஸ்நானத்தின் அடையாளம் வல்லமை தான் என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். நூற்றி இருபது சீஷர்களின் காரியத்தில் ஒரு சிறிய அற்புதம் செய்யப்பட்டதின் அடையாளம் கூட இல்லாவிட்டாலும், பரிசுத்த ஆவியானவரில் நிச்சயமாகவே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று அவர்களுக்கு மறுபடியும் குறிப்பிட்டு காண்பிக்கிறோம் (அப். 2:33). சமாரியர்கள் எந்த அற்புதத்தையும் செயல்படுத்தி காட்டாவிட்டாலும், அவர்கள் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றதை மாய வித்தைக்காரனாகிய சீமோன் கண்டான் (அப். 8:18). அப்படியே கொர்நெலியுவும் தனது வாழ்வில் எந்த அற்புதத்தையும் செய்யாவிட்டாலும், பரிசுத்த ஆவியானவரில் அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதை யூதர்கள் அங்கீகரித்தார்கள் (அப். 10:47).

கிறிஸ்தவர்கள் வல்லமையை ஏன் காண்பிக்கிறதில்லையென்றால், பல நேரங்களில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வரங்களை அறியாமலிருப்பதேயாகும் (1 கொரி. 12:1). மாறாக, அவர்கள் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமலிருந்ததினால்ல. பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெறாததினால் அல்ல, கனியும் வல்லமையும் குறைந்திருப்பதின் காரணம், வேதவசனத்தில் போதனையும் நிலைபெற்றோங்குவதும் குறைவுபடுவதேயாகும். அந்நியபாஷை பேசுதலோடுகூடிய பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் தான் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானத்தின் வேதாகம நியமமாகும்.

### *இரண்டு வகையான அந்நிய பாஷைகள்*

அந்நிய பாஷைகளின் மண்டலத்தில் அநேக கிறிஸ்தவர்களுக்கு உள்ள குழப்பம், இரண்டு வகையான அந்நிய பாஷைகள் இருக்கிறதை அவர்கள் உணராதிருப்பதேயாகும். அவைகளில் ஒன்று, வியாக்யானம் செய்ய அவசியமில்லாமல் தேவனை நோக்கி (அந்நிய பாஷையில் ஜெபித்தல்) அந்நிய பாஷையில் பேசுவதாகும். எப்படியும், தேவன் எல்லா பாஷையையும் விளங்கிக்கொள்கிறார். மற்றொன்று வியாக்யானம்செய்யப்படவேண்டிய அந்நிய பாஷையில் (பரிசுத்த ஆவியானவரின் ஒரு ஊழியவரம்) பேசுதலாகும்.

தேவனை நோக்கி அந்நிய பாஷையில் பேசுதல் என்பது ஆவியில் ஜெபிப்பதாகும். இது நமது ஆவிமனிதன் ஜெபிப்பதே (1 கொரி. 14:14, 15). மறுபடி பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது ஆவிமனிதனை ஜெபிக்க அனுமதிக்க வேண்டும். தங்களது ஆவி மனிதன் ஜெபிக்கையில், அவர்களுடைய விளங்கிக் கொள்ளுதல் பயனற்றதாயிருக்கும் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார் (1 கொரி. 14:14). அந்நிய பாஷையில் பேசும் ஒவ்வொரு முறையும் ஆவிமனிதன் ஜெபிக்கிறதே அதன் பொருளாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஒரு ஆவிமனிதன் இருக்கிறான், அந்த ஆவிமனிதன் அவசியம் ஜெபிக்க வேண்டும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

அதே வேளையில், ஒருசிலர் மாத்திரமே, சபையில் நானாவித பாஷைகளை பேசி அவைகளை வரங்களாக வெளிப்படுத்துவார்கள் (1 கொரி. 12:10, 28, 30). அந்நியபாஷைகளின் இந்த வெளிப்பாடு வியாக்யானம் செய்யப்படவேண்டும். ஏனெனில், இது தேவனை நோக்கிப் பேசப்படுவதல்ல. ஆனால், இது தேவனுக்காக மனிதர்களிடம் பேசப்படுவதாகும். மனிதர்கள் இந்த அந்நிய பாஷைகளை விளங்கிக் கொள்ளாததால் (சில சூழ்நிலைகளில் இல்லாததுபோல, பேசுகிறவருக்கு அந்த பாஷை விளங்காவிட்டாலும் கேட்கிறவருக்கு அந்த பாஷை விளங்கக் கூடியதாயிருக்கும்), நமது கிறிஸ்தவ ஆராதனைகளில் இந்த வரமாகிய அந்நியபாஷை வியாக்யானத்தோடு ஒழுங்கும் கிரமமுமாக செயல்பட நாம் அனுமதிக்க வேண்டும்.

*அந்நிய பாஷைகளில் பேசுவதன் முக்கியத்துவம்*

அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, அதனுடைய பயன்களைப் பற்றிய போதனை அவர்களுக்கு கொடுக்கப்படாததால், அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும் பயிற்சியை தொடர்ந்து அவர்கள் செய்வதில்லை. அந்நிய பாஷையில் ஜெபிப்பது தென்பது நமது ஆவியில் ஜெபிப்பதென்று பவுல் சொன்னதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் (1 கொரி. 14:14). அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும் பொழுது நாம் ஆவிமண்டலத்தில் நேரம் செலவழிக்கிறோம். ஆகவே, நாம் ஆவி உலகத்திற்கு அதிக உணர்வுள்ளவர்களாக வளர்கிறோம்.

எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், அந்நிய பாஷைகளைப் பற்றி எனக்கு ஒரு ஆவிக்குரிய அனுபவம் உண்டாகும் வரையில், அந்நிய பாஷைகளைப் பேசுவதின் பயன்களை நான் உணர்ந்து அறிந்து கொள்ளவில்லை. ஒரு நாளில் அடுக்குமாடி கட்டடத்தின் முன்மண்டபத்தில் நான் உட்கார்ந்து அந்நிய பாஷையில் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தேன். ஒரு மணி நேரம் ஜெபித்திருப்பேன். திடீரென்று அந்நிய பாஷையில் ஜெபிப்பது கடினமாவதை உணர்ந்தேன். நான் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் செயற்கையாக வருவதை உணர்ந்தேன், மிகப்பெரிய முயற்சியோடு சமாளித்து ஜெபித்தேன். எனினும் அந்நிய பாஷையில் விடாபிடியாக ஜெபித்தேன். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஜெபிப்பது மிகவும் இலகுவானது.

அந்த அனுபவத்தை நான் விளங்கிக் கொள்ளவில்லை. ஆனால் அதே முன் மண்டபத்தில் நான் அந்நிய பாஷைகளில் ஜெபித்தது போன்ற அதே படத்தை ஆண்டவர் அந்த இரவில் எனக்கு காண்பித்தார். சுலபமாக அந்நிய பாஷைகளில் நான் ஜெபிப்பதை அதில் பார்த்தேன். பிறகு திடீரென்று கறுப்பு முடிகொண்ட ஒரு பிசாசு வந்தான். அவன் 'யகிட்டி, யகிட்டி, யக், யக்' என்று சொல்லிக்கொண்டு என்னை சுற்றி சுற்றி வந்தான். நான் அதைக் பார்க்காததால் பகற்காலத்தில் அந்தப் பிசாசு அங்கு இருந்ததை மெய்யாகவே நான் உணராதிருந்தேன். ஆனால் அது அங்கிருந்தது அதே நிகழ்ச்சி ஆவிக்குரிய பரிமாணத்தோடு சேர்த்து ஒரு திரைப்படத்தைப் போல திரும்பவும் எனக்கு காண்பிக்கப்பட்டது.

முடிகள் நிறைந்த அந்த பிசாசு என்னை சுற்றி சுற்றி வந்தபோது, அந்நிய பாஷைகளில் ஜெபிக்க நான் ஏன் சிரமப்பட்டேன் என்ற அந்த அனுபவம், அதன் பிறகு எனக்கு அதிசயமாயில்லை. அந்நிய பாஷைகளில் பேசி ஜெபிப்பது எனக்கு போராட்டமாயிருந்தாலும், நான் கூர்ந்து கவனிக்கையில், நான் தொடர்ந்து ஜெபிப்பதை நானே கண்டேன். திடீரென்று லேசர் ஒளிக்கற்றைகளைப் போல வெண்மையான ஒளி எனது உதடுகளிலிருந்து வந்தன. அது அந்தப் பிசாசை உதைத்துத் தள்ளியது. அந்தப் பிசாசு பயத்தினால் அலறி சத்தமிட்டு மெதுவாக ஊர்ந்து என்னைவிட்டுப் போய்விட்டது. உடனடியாக, நான் எழும்பி அந்நிய பாஷைகளில் பேசுவதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் ஆவிக்குரிய உலகத்தின் மேல் அதற்குள்ள தாக்கத்தைப் பற்றியும் ஆண்டவர் என்னோடு பேசினதைக் கேட்டேன்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

மற்றுமொரு தரிசனத்தில், அடர்ந்த தடித்த பருமனான இருட்டு மேகத்தால் இந்த உலகம் மூடியிருந்ததை நான் பார்த்தேன். பூமியிலிருந்து வல்லமையுள்ள ஒளிக்கற்றைகள் அந்த இருட்டை ஊடுருவி பரலோகத்திலிருந்த தேவ சிங்கானத்தை அடைந்தன. அந்த தரிசனத்தில் நான் கண்ட ஒளிக்கற்றைகள் கிறிஸ்தவர்களுடைய ஜெபமாயிருந்தன. அவர்களில் அநேகர் அந்நிய பாஷையில் ஜெபித்துக்கொண்டிருந்தார்கள்.

இந்த இரண்டு அனுபவங்களிலிருந்து, அந்நிய பாஷைகளில் நீண்ட மணி நேரங்கள் கருத்தாக ஜெபிக்க ஆரம்பித்தேன் அந்நிய பாஷையில் நீண்ட மணிநேரங்கள் நாம் ஜெபிக்கும்போது, நமது மனது அமைதியாக அமர்ந்த நிலைக்கு வரும் ஒரு சமயத்தை நான் கவனித்தேன். அந்த இடத்தை நாம் அடையும் பொழுது, நமது வாழ்விலுள்ள தேவ பிரசன்னத்தின் விழிப்புணர்வு உயர்த்தப்படுகிறது. முதலில் நாம் அந்த நிலையை அடைய ஆறு முதல் எட்டு மணி நேரங்கள் ஆகும். ஆனால் தேவ பிரசன்னத்தின் அனுபவம் நமக்கு பரிட்சையப்படும்பொழுது, அந்த நிலையை அடைய குறைவான நேரமே நமக்கு ஆகும். அனுபவம் அதிகரிக்க அதிகரிக்க, ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே நாம் மனதின் அமைதி நிலையை அடையமுடியும். மனதின் இந்த அமைதி நிலையில் தானே, உள்ளான தேவ சத்தம் உரத்த சத்தத்தோடும் தெளிவாகவும் காணப்படும்.

எனது ஆவிக்குரிய பரிசோதனைகளில் ஒன்றில், நான் நாற்பத்தி எட்டு மணி நேரங்கள் இடைவிடாமல் அந்நிய பாஷையில் ஜெபித்தேன். அந்தக் கட்டத்தில் நான் ஒரு வித்தியாசமான மண்டலத்திலிருந்தேன். இயற்கையான பொருட்களை காண்பதைப் போலவே ஆவிக்குரிய உலகத்திற்குள்ளே எழுத்தின்படியே நான் பார்த்தேன். அந்நிய பாஷைகளில் பேசி ஜெபிப்பதன் முழுமையான பலனை, இயேசுகிறிஸ்துவின் திருச்சபை இன்னும் பிரயாசப்பட்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்நியபாஷை ஜெபத்திற்கு குறைந்தது ஒருமணி நேரமாவது செலவிடுவது முக்கியமாகும். ஆத்துமாவிற்கும் சரீரத்திற்கும் மேலே ஆவி மண்டலத்தின் சமமாக வெட்டும் இடம் ஒருமணிநேரமாய் காணப்படும். ஒரு மணி நேரம் காத்திருக்கக்கூடாதா என்று இயேசு தனது சீஷர்களை கேட்டார் (மத்.26:40, 41). நீங்கள் இன்னும் மனதின் அமைதி நிலையை ஒருபோதும் அனுபவிக்காதிருந்தால், அந்நிய பாஷையில் ஒரு நாள் முழுவதும் செலவழித்து ஜெபிக்க விடுப்பு எடுத்துக் கொள்ளுங்கள்.

*அந்நிய பாஷைகளில் ஜெபிப்பதால் உண்டாகும் பத்து பயன்கள்*

அந்நிய பாஷைகளில் ஏன் நாம் ஜெபிக்க வேண்டும் என்பதற்கான பத்து காரணங்கள் பின்வருமாறு:

1. அந்நிய பாஷைகளில் நாம் ஜெபிக்கும்போது, நமது ஆவிமனிதன் தான் ஜெபிக்கிறான் (1 கொரி. 14:14). அந்நிய பாஷைகளில் நாம் ஜெபிக்கும்பொழுது நமது ஆவிமனிதன் செயல்பட தூண்டப்பட்டு, நமது முழு ஆள்தத்துவத்தின் மேலும் ஆதிக்கம் செலுத்துகிறான்.

2. நமது ஆவி மனிதன் கட்டி எழுப்பப்பட்டு ஊக்கமளிக்கப்படுவது, நாம் அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும் பொழுதுதான் நடைபெறுகிறது (1 கொரி. 14:4).

3. நாம் அந்நிய பாஷைகளில் பேசி ஜெபிக்கும்போது, நாம் தேவனிடம் பேசி அவரை உயர்த்தி கனப்படுத்துகிறோம் (அப். 10:45; 1 கொரி. 14:2).

4. நமது ஆவியில் நாம் ஜெபிக்கும் அந்நியபாஷை ஜெபம், சாத்தானுக்கு எதிரான ஆவிக்குரிய ஆயுதத்தின் ஒரு பகுதியாகும் (எபே. 6:10 – 18).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

5. நாம் அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும்போது, நமது மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் கட்டி எழுப்பப்படுகிறோம் (யூதா 20).

6. அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும் ஜெபம், நமது ஜெப வாழ்க்கைக்கு உதவி செய்கிறது (ரோம. 8:26).

7. அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும் ஜெபம் தேவனுடைய பரிபூரண சித்தத்திலிருக்கிறது (ரோம. 8:27).

8. பலவீனங்களுக்கு எதிராக அந்நியபாஷை ஜெபம் நமக்கு உதவி செய்கிறது (ரோம. 8:26). பலவீனம் என்கிற வார்த்தை, இயேசு நமது பலவீனங்களையும் நோய்களையும் சுமந்தார் என்று சொல்லப்பட்டபோது பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தை தான் இது (மத். 8:17). அந்நிய பாஷைகளில் ஜெபிப்பது நமக்குள்ளும் நம்மைச் சுற்றிலும் ஒரு ஆவிக்குரிய வலிமையை உண்டாக்கி, நம்மை நோய் எதிர்ப்பு தன்மை உள்ளவர்களாக மாற்றுகிறது.

9. நாம் அந்நிய பாஷையில் பேசி ஜெபிக்கும்பொழுது, நாம் நமது ஆவிக்குரிய இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம் (எபி. 4:8 –10, 1 கொரி. 14:21, ஏசா. 28:11, 12).

10. அந்நியபாஷையில் ஜெபிப்பதும் பாடுவதும், நமது விளங்கிக்கொள்ளுதல் நம்மை அனுமதிப்பதற்கும் உயர்வான ஒரு மட்டத்தில், நாம் தேவனை ஆராதிப்பதற்கு நமக்கு உதவி செய்கின்றன (1 கொரி. 14:15; யோவா. 4:23, 24).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## அத்தியாயம் 5

# பரிசுத்தாவியானவருடைய வித்தியாசமான அளவுகள்

பரிசுத்த ஆவியானவருடைய மிகவும் குறிப்பிடத்தக்க தன்மை என்பது அளவிடப்படும் தன்மையே. பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் அளவுகளில் கொடுக்கப்பட்டார். எலியாவினுடைய அபிஷேகத்தை இரண்டு மடங்காக எலிசா பெற்றுக்கொண்டார் (2 இராஜா. 2:9). மோசேயின் மேல் பரிசுத்த ஆவியானவரின் அளவு ஒன்றிருந்தது. அது எடுக்கப்பட்டு எழுபது மூப்பர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது (எண். 11:17). பரிசுத்த ஆவியானவரின் ஆள் தத்துவத்தை நம்மால் பிரிக்கமுடியாது என்று சிலர் சொல்கின்றனர். மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களின் ஆவியில், பரிசுத்த ஆவியானவர் இந்த வேளையில் வசிக்கிறார். அவர் நமது இருதயங்களில் எப்படி இருக்கிறார் என்று நம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. எனினும் மற்ற கிறிஸ்தவர்களுடைய இருதயத்திலும் அவர் வசிக்கிறார். ஆனாலும், அவர் எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கிறதை நாம் அறிவோம்.

### *இரட்சிப்பின் அளவு*

ஒரு கிறிஸ்தவன் மறுபடியும் பிறக்கும்பொழுது, அவன் பரிசுத்த ஆவியானவரின் ஒரு அளவைப் பெறுகிறான். அதை நாம் மறுபடியும் பிறக்கும் அளவு என்று, அழைக்கிறோம். அந்த நேரத்தில் ஒரு கிறிஸ்தவனோடுதான் பரிசுத்த ஆவியானவர் உள்ளார் என்றும், அவனுக்குள் இல்லை என்றும் சில கிறிஸ்தவர்கள் சொல்கிறார்கள் (யோவா. 14:17). எனினும், இன்னும் மறுபடியும் பிறவாமலிருந்த சீஷர்களை மட்டும்தான் இயேசு குறிப்பிட்டார். அவர்கள் பழைய ஏற்பாட்டு அர்த்தத்தில்தான் பரிசுத்த ஆவியானவரை பெற்றுள்ளனர்.

அவர்கள் மறுபடியும் பிறந்தபொழுது, பரிசுத்த ஆவியானவர் அவர்களது ஆவியில் இப்பொழுது வசிக்க முடிந்தது. இயேசுவே தேவகுமாரனென்று யாரெல்லாம் அறிக்கை செய்கிறார்களோ, அவரில் தேவன் நிலைத்திருக்கிறார், அவரும் தேவனில் நிலைத்திருக்கிறார் (1 யோவா. 4:15). அவர் நமக்கு கொடுத்த ஆவியானவராலே அவர் நம்மில் நிலைத்திருக்கிறார் என்று அறிகிறோம் (1 யோவா. 3:24). நாம் மறுபடியும் பிறக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாகவே நமக்குள் வாசம் பண்ணுகிறார் (ரோம. 8 :9–10).

எபேசிய விசுவாசிகள் மறுபடியும் பிறந்து பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், அவர்கள் ஞானத்தையும் வெளிப்பாட்டையும் அளிக்கிற ஆவியானவரை பெறும்படி பவுல் அவர்களுக்காக ஜெபித்தார் (எபே. 1:17, 18). பரிசுத்த ஆவியானவரில் வளர்ந்து பெருகும் அளவுகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். நாம் ஒவ்வொரு அளவாக வளரும் பொழுது, நாம் இயேசுகிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவை அடைவோம் (எபே. 4:11).

### *ஞானஸ்நான அளவு*

நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகம் உண்டாகாது, நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர், அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் (யோவா. 4:14). இது பரிசுத்த ஆவியானவரின் இரட்சிப்பின் அளவைக் குறிப்பதாகவே நான் விசுவாசிக்கிறேன்.

ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன், அவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று இயேசு சொன்னார் (யோவா. 7:37, 38).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஒரு கிணற்றைக் காட்டிலும் அதிக அளவு தண்ணீரைத்தான் ஆறுகள் அர்த்தப்படுத்துகின்றன. இங்கு பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் என்பது பரிசுத்த ஆவியானவரில் முழுகுவதும் அவரைத் தரித்துக்கொள்வதுமாகும் (லூக். 24:49). பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருப்பது மட்டுமல்லாமல் நம்மேலும் அவர் இருக்கிறார் (அப். 1:8).

ஒரு நபர் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுகையில், அவர் நனைந்துபோகிறார். தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றதற்கு அங்கு அடையாளமிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரில் ஒரு நபர் ஞானஸ்நானம் பெறும்பொழுது, பரிசுத்த ஆவியானவரில் அவர் ஞானஸ்நானம் பெற்றதிற்கும் ஒரு அடையாளமிருக்கும். பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் என்பது பரிசுத்த ஆவியானவரால் கட்டுப்படுத்தப்படுவதாகும். நமது ஆள்தத்துவத்தின் கட்டுப்பாட்டு மையம் நாவாயிருப்பதால், நம்மைக் கட்டுப்படுத்த நமது நாக்கை பரிசுத்த ஆவியானவர் முதலாவது கட்டுப்படுத்துவது இயற்கையானதே (யாக். 3:2–7).

யாக்கோபு இன்று தனது நிருபத்தை எழுத வேண்டியிருந்தால், நமது நாவை கப்பலின் சுக்கானுக்கும் குதிரையின் கடிவாளத்திற்கும் ஒப்பிடுவதற்கும் பதிலாக, நமது நாவை ஒரு காரின் ஸ்டியரிங் வீலுக்கு ஒப்பிட்டிருப்பார் (யாக். 3:3,4). ஒரு காரை நாம் கட்டுப்படுத்த விரும்பினால், அதன் ஸ்டியரிங் வீலை கட்டுப்படுத்துவது இயற்கையானது தான். எனவே பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வை கட்டுப்படுத்த அதை நிரப்புகிறார் என்றால், நமது நாவுகளைக் கட்டுப்படுத்துவதே அவர் செய்யும் முதலாவது காரியமாகும்.

### *இயேசுவினுடைய பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்*

இயேசுவினுடைய பரிசுத்த ஆவியானவர் ஞானஸ்நானத்திற்கும், பரிசுத்த ஆவியானவரில் நாம் பெறும் ஞானஸ்நானத்திற்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் வந்த பொழுது, அவர் புறாவின் வடிவில் வந்தார், இயேசு அந்நிய பாஷைகளை பேசவில்லை (லூக். 3: 22). சீஷர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்தபொழுது, அக்கினி வடிவில் வந்தார், அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசினார்கள் (அப். 2:3, 4). இயேசு பரிசுத்த ஆவியானவராலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று யோவான் ஸ்நானகன் சாட்சி கொடுத்தார் (லூக். 3:16).

இயேசுவுக்கும் நமக்குமிடையே இரண்டு வித்தியாசங்கள் உள்ளன. இயேசுவுக்கு பாவ சுபாவமும் புதிதாக்கப்படாத மனதும் இல்லை. நம்மெல்லாருக்கும் பாவ சுபாவமும் புதிதாக்கப்படாத மனமும் நமது மனந்திரும்புதலுக்கு முன்பே உள்ளன. எனவே பரிசுத்த ஆவியானவரில் நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது, பரிசுத்த ஆவியானவரது அக்கினி நம்மை தொடர்ந்து சுத்திகரித்து, நமது பாவ சுபாவத்தின் இயற்கையான பலவீனத்திலிருந்து நமது வாழ்வை பாதுகாக்கிறது. நமது மனதின் மட்டுப்பாட்டையும் தவிர்த்து ஜெபிக்கவும் நமக்கு ஒரு திறமை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அது இன்னும் புதுப்பிக்கப்படும் தொடர் செயல்முறையில் தான் உள்ளது. நாம் அந்நிய பாஷையில் ஜெபிக்கும் பொழுது, நமது புத்தி விளங்கிக் கொள்வதில்லை (1 கொரி. 14:14, 15).

நமது பாவ சுபாவத்தை மேற்கொள்ள, தேவன் நமக்கு ஆவிக்குரிய ஆயுதங்களை கொடுத்து தகுதிப்படுத்தியுள்ளார். அது மட்டுமல்லாமல், இயேசு இந்த உலகத்தில் வெளிப்பட்ட பொழுது எப்படி இருந்தாரோ அப்படியே நாமும் இருக்கவும், நமது புதுப்பிக்கப்படாத மனதை மேற்கொள்ளவும் தேவன் நம்மை தகுதிப்படுத்தியுள்ளார்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

*பரிசுத்த ஆவியானவரின் பெருகும் அளவுகள்*

பரிசுத்த ஆவியானவரில் தொடரும் ஞானஸ்நானங்கள் என்பது பற்றி 'எழுப்புதல் அக்கினிகள்' என்று தனது புத்தகத்தில் சார்லஸ் ஜி. பின்னி பேசுகிறார். நாம் ஒருமுறை பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றதையும், அதன் பிறகு பரிசுத்த ஆவியானவரில் மீண்டும் மீண்டும் அதிக அளவையும் நாம் பெறமுடியும் என்பதையும் நான் விசுவாசிக்கின்றேன். சீஷர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டபொழுது, தேவனை நோக்கி தேவ வார்த்தையை பேசுவதற்கான தைரியத்தை ஜெபத்தில் கேட்டதை, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் காண்கிறோம் (அப். 4:30). ஏற்கெனவே அவர்கள் பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், பரிசுத்த ஆவியானவரை அதிக அளவு அவர்களுக்குக் கொடுத்து நிறைத்து தேவன் அவர்கள் ஜெபத்திற்கு பதில் கொடுத்தார்.

சீஷர்கள் மறுபடியும் ஒருமுறை நிரப்பப்பட்டு, தேவ வார்த்தையை தைரியமாய் பேசினார்கள் (அப். 4:30). மிகுந்த பலமாய் சாட்சி கொடுத்தார்கள் என்று வேதம் எவ்வாறு குறிப்பிடுகிறதென கவனியுங்கள் (அப். 4:33). பரிசுத்த ஆவியானவரின் அதிக அளவு, வல்லமையின் பெருகின அளவை உண்டாக்கியது.

ஏற்கெனவே மறுபடியும் பிறந்து பரிசுத்த ஆவியானவரில் ஞானஸ்நானம் பெற்ற எபேசிய விசுவாசிகளுக்காக, வெளிப்பாடு மற்றும் ஞானத்தின் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள பவுல் அவர்களுக்காக ஜெபித்தார் (எபே. 1:17). ஏற்கெனவே அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தாலும், தேவன் அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரைத் தரும்படி பவுல் ஜெபித்தார். பரிசுத்த ஆவியானவரின் அளவு அவர்கள் வாழ்வில் பெருகும்படி பவுல் அவர்களுக்காக ஜெபித்தார்.

*பரலோகத்தில் பரிசுத்த ஆவியானவர்*

சிங்காசனத்திற்கு முன்பாக இயேசுகிறிஸ்துவையும் ஏழு ஆவிகளையும் அப்போஸ்தலனாகிய யோவான் தரிசனத்தில் பார்த்தார் (வெளி. 1:4; 4:5; 5:6). பரலோகத்திலுள்ள பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு தானே, அளக்கப்படக்கூடிய விநோத தன்மையை பரிசுத்த ஆவியானவர் பெற்றிருப்பதை நமக்கு கூறுகிறது. சந்தேகத்திற்கிடமில்லாமல் பரிசுத்த ஆவியானவர் தெய்வீகத்தின் மூன்றாம் நபராயிருக்கிறார். வேதாகமம் முழுமையிலும் மனித பாத்திரங்கள் மூலமாய் காண்பிக்கப்பட்ட அவருடைய செயல் அளவிடப்படுகிற திறமையை, அவர் ஒரு நபராயிருப்பது மட்டுப்படுத்தவில்லை.

ஏழு என்கிற எண், இயேசு பெற்றிருந்த முழு அளவாகிய பரிசுத்த ஆவியானவரை காண்பிக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் முழு அளவையும் இயேசுகிறிஸ்துவின் திருச்சபையானது பெற்றுக்கொள்வதே தேவ சித்தமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை அடைவதே, திருச்சபை அடையவேண்டிய உன்னத நிலையாகும் (எபே. 4:11).

பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தையும் தன்மையையும் விளங்கிக்கொள்ளுதல், தேவனுடைய பாதத்தில் எப்பொழுதும் மாறாமல் நம்மைத் தாழ்த்த நமக்கு உதவி செய்யும். எனவே, பரிசுத்த ஆவியானவரின் அதிக அளவை மீண்டும் மீண்டும் கேட்டு பெற்றுக் கொள்ள நாம் கற்றுக்கொள்கிறோம். நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அந்த இடத்திலேயே நின்றுவிடாதீர்கள். தேவனுடைய பரிபூரணத்திற்குள் ஆழமாய் செல்ல தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். பரிசுத்த ஆவியானவரின் பெரிய அளவுகளுக்குள்ளாக ஆழமாய் செல்ல தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.